1983 பிப்ரவரி 5]

திரு.என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை இந்த மன்றத்தில் நான் 3 முறை முன்னால் எழுப்பி இருக்கிறேன். வளர்ச்சிமன்றக் கூட்டத்திலேயும் பல முறை கேட்டிருக்கிறேன். 15 நாட்களுக்கு முன்னால் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எந்த வழியாகப் பாலம் அமைக்க வேண்டுமென்று கூட நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, ரூ 96,000 கட்ட வேண்டுமென்று அவர்கள் கேட்ட நேரத்தில், நான் வற்புறுத்தி, அதைக் கட்டியும் இருக்கிறார்கள். ரெயில்வே சம்பந்தப்பட்ட துறை இந்த நாள் வரையிலும் அனுமதி கொடுக்கவில்லையென்பது தான் உண்மை. அதனால்தான் அந்தப் பாலம் கட்டுவது நிற்கிறது என்பதும் உண்மை. அந்த அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சர் அவர்கள் மேலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் நண்பர் பலராமன் அவர்களானாலும் சரி, எங்கள் கட்சித் தலைவர்கள் மூலமாக வேண்டுமென்று சொன்னால் கூட, நாங்கள் ரெயில்வே போர்டினரைச் சந்தித்துப் பார்ப்பதற்கு முயற்சிக்கிறோம். அதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு வேண்டுகோள்.

இளையான்குடி தாலுக்காவிலுள்ள குருச்சி உள்கடை, கருங்கன்னியேந்தல் கண்மாய்

*வினா எண். 151—திரு. செ. சிவசாமி:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், இளையான்குடி தாலூகா, குருச்சி உள்கடை, கருங்கன்னியேந்தல், கண்மாயில் ரூ.20,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டிருந்த கலுங்கு உடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் மீண்டும் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) துரித நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முடிவிற்குள் வேலை முடிக்கப்பட்டு இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் விடப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கருங்கன்னி யேந்தல் கண்மாய் 20,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலுங்கு ஆகும். இது உடைந்து நீண்ட நாட்களாக ஆகிறது. அந்தக் கலுங்கு கட்டப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தம் என்பதால் உடைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடம் தனியாருக்குச் சொந்தமானதா? அல்லது அந்த இடம் அரசுச் சொந்தமான புறம்போக்கில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தனியாருக்குச் சொந்தம் என்ற முறையிலே குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் கலுங்கு உடைந்திருக்கிறது என்று குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு துரித நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு வரும் மார்ச் மாதத்திற்கு முன்னால் வேலைகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வேலை முடிக்கப்பட்டவுடன் இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் விடப்படும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தால் மீண்டும் உடைக்கப்படும் நிலைமை ஏற்படும். எனவே, அதைத் தடுக்கின்ற முறையில் அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே உடைக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. சிவசாமி அவர்கள் சொல்வதைப் பார்த்தால் யார் உடைக்கிறார்களென்பதும் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் என்னிடத்தில் இரகசியமாக யார் உடைக்கிறார்கள் என்று தெரிவித்துவிட்டால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இயக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய குறிப்பிலேயே இருக்கிறது இவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்ட கலுங்கு உடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி உடைத்தவர்களின் பேரில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அந்தக் கலுங்கை உடைப்பதற்கான காரணம் என்ன? சர்க்காருடைய இடமாக இல்லாமல் தனிப்பட்டவர்களுடைய இடமாக இருந்தால் அரசாங்கப் பணத்தைக் கொண்டு தனியாருடைய இடத்தில் கலுங்கை ஏன் கட்டினோம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது உடைக்கப்பட்டது என்பதைக் காட்டிலும் உடைந்து போயிருக்கிறது என்ற குறிப்புகள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. தனியார் யாராவது உடைத்திருக்கிறார்களா என்பதற்கான

1983 பிப்ரவரி 5]

குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. ஆகவே, உடைந்து போய் இருக்கும் கலுங்கை மீண்டும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் இதுபோன்ற நிலைமைகளை யாரேனும் உருவாக்கினார்கள் என்றால் அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள டிராக்டர்கள்

* **வினா எண் 152—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள டிராக்டர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) செயல்படாமல் இருக்கும் டிராக்டர்களை செயல்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஊராட்சி ஒன்றியங்களில் 328 டிராக்டர்கள் உள்ளன.

(ஆ) செயல்படாமலிருக்கும் டிராக்டர்களை பணிமனைக்கு அனுப்பி பழுது பார்த்த பின்னர் அவைகள் மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. மேலும் செயல்படாமலிருக்கும் சில டிராக்டர்களை அதிக தொகை கொடுத்தும் பழுதுபார்த்தாலும் அவைகளை இலாபம் ஈட்டித் தரத் தக்க வகையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த டிராக்டர்களை ஏலமிடுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையிலே உள்ளன.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்து விட்ட அல்லது வேலை செய்ய இயலாத அந்த டிராக்டர்களை ஏலத்திற்கு விடும் பொழுது, வாங்கப்பட்ட காலத்திலேயிருந்து அந்த டிராக்டர்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்திருக்கின்றன, அதன் நிலைமைகள் என்ன என்பதை பரிசீலனை செய்வதோடு, அந்த வேலையிலே அக்கறையில்லாத சில டிரைவர்கள் அந்த டிராக்டர்களை கன்டெம் செய்ய வேண்டுமென்று சொல்வதால் ஏலத்திற்கு விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து பிறகு ஏலத்திற்கு விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து விட்டுத்தான் ஏலம் விடலாம் என்ற நிலைமைகளை எடுத்துள்ளோம்.